**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 64. ஶ்ரீமான் ராகா கும்பர் குடும்பம்**

---

அஹிம்சையும் பற்று அற்ற தன்மையும் பல ஜென்மங்களின் பயிற்சியால் கைகூடும்.அதை நிரூபித்தவர் ராகா. அவரது முழு குடும்பமும் முக்திக்கு வழிதேடிய வரலாற்றை மிகவும் ஏக்கத்துடன் பார்த்தவர் ஶ்ரீநாம தேவர் என்றால் இவர்களது மேன்மையை என்ன சொல்வது?

ஊர்: பண்டரீபுரம்

தொழில்: மண் கலங்கள் செய்யும் குயவர்.

மனைவி: ஶ்ரீமதி பாகா, மகள்: செல்வி.பாகா பாய்

குடும்பச் சிறப்பு: சதா பக்தியால் பாட்டுப்பாடிக் கொண்டே இருக்கும் குடும்பம் இது.வரும் வருமானத்தில் அன்னதானமும் கோயிலில் பல கைங்கர்யங்களும் செய்யும் வீடு இது.அஹிம்சையையும் வைராக்யத்தையும் உயிரை விட மேன்மையாகக் கருதி பின்பற்றும் குடும்பம் இது.நாம தேவரே இவர்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டாராம்.

**<u>வைராக்யம்:</u>**
* தன் வீட்டுச் சூளையில் பூனைக் குட்டிகள் தீயில் சிக்கிக் கொள்ள இவர்களின் தீவிர நாம ஜெபத்தால் மறுநாள் காலை சூளை பிரிக்கப்பட்டதும் அவை உயிரோடு வெளியேறின.அதனால் அன்று முதல் அத்தொழிலை விட்டு விட்டு காட்டுக்குள் தானாகவே விழுந்த மரத்தின் சுள்ளிகளைப் பொறுக்கி விற்று வாழும் வைராக்யம் பெற்ற குடும்பம்.

* விறகு பொறுக்கும் போது வழியில் ஒரு பொன் வளையல் இருக்க அதை உதாசீனம் செய்து விட்டு விறகுகளைக் கட்டிய குடும்பம்.

* இதன் மூலம் அவர்களின் மேன்மையை நாம தேவர் உணர்ந்தார்.

* பாண்டுரங்கனே "**ராகாவின் குடும்பம் என் குடும்பம்**" என்றானாம் வாய் திறந்து அவரிடம்.

* இறைவனின் திவ்ய தரிசனத்தை நேராகப் பெற்றும் முக்தியைக் கூட வேண்டாமல் சதா சேவையை வேண்டிய குடும்பம்.

இதுவல்லோ பாரதீயக் குடும்பம்?!

ஹரி ஓம்!